OFPRA

**CONCOURS POUR LE RECRUTEMENT**
**D'OFFICIERS DE PROTECTION DES REFUGIES ET APATRIDES**
**AU TITRE DE L'ANNEE 2007**

SESSION DES 20 ET 21 MARS 2007

**EPREUVE ECRITE D'ADMISSIBILITE**
**Epreuve n°3**

*(au choix du candidat exprimé au moment de l'inscription)*

Epreuve écrite de langue vivante étrangère consistant en la réponse à une ou plusieurs questions de compréhension d'un texte. Les questions ainsi que les réponses sont rédigées dans la langue de l'épreuve.

# TAMOUL

**L'usage du dictionnaire est autorisé.**
**(à l'exclusion des dictionnaires électroniques)**

*(Durée : 2 heures - coefficient 2)*

## முன்னேற்றத்தில் ஏற்றத்தாழ்வு : உலக எழுத்தறிவு : தவறு எங்கே?

பல வளர்முக நாடுகளில், இளைஞர்களிலும் வயது வந்தவர்களிலும் இன்னும் பாதிப்பேர் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் மூன்றில் இரு பகுதியினர் சிறுமிகளும் பெண்களுமே. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நாம் கண்ட கவலை தரும் நிலைமை இது தான்.

சென்ற பல பத்தாண்டுகளில் மண்டல அளவில் எழுத்தறிவின்மை வீதங்கள் குறைந்து வந்த போதிலும், வளர்முக நாடுகளில் இன்னும் தொண்ணூறு கோடிப் பேர் எழுத்தறிவின்றி இருக்கிறார்கள். 1990இல் தாய்லாந்தில் நடந்த “எல்லோருக்கும் கல்வி” மாநாட்டில் எழுத்தறிவின்மையை ஒழிக்க எடுத்துக்கொண்ட உறுதிமொழியை நாம் ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை என்ற சங்கடமான கேள்வியைத் தான் இன்று எதிர்நோக்குகிறோம்.

முறையான தொடக்கக் கல்வி என்பது “அடிப்படைக்கல்விதான்” என்று நாம் கருதி வருகிறோம். வளர்முக நாடுகளில் அரசுகளும் பன்னாட்டுக் கொடையாளி முகவாண்மைகளும் இந்தக் கொள்கைக் கண்ணோட்டத்துடன் தான் செயற்பட்டு வருகின்றன. தொடக்கக் கல்வியை மேம்படுத்தவே தங்கள் நிதிகளில் பெரும் பகுதியைச் செலவிட்டும் வருகின்றன. ஆயினும், அதன் பலன்கள் மனநிறைவு அளிப்பதாக இல்லை. நிதி ஒதுக்கீட்டில் சிக்கனம், தலைக்கு அடிப்படைக் கல்வி மீதான செலவு குறைவு, மிக அதிக அளவில் மக்கள் தொகைப் பெருக்கம், போர்கள், உள்நாட்டுப் போர்கள் போன்ற காரணங்களால், சகாராவையொட்டி ஆஃப்ரிக்காவிலும் தெற்கு ஆசியாவிலும் வளர்முகநாடுகளில் முறை சார்ந்த கல்வியும் குழந்தைகள் கல்வியும் தரம் குறைந்துள்ளன. இந்த வீழ்ச்சியின் விளைவாக, எழுத்தறிவின்மை பெருகிவிட்டது. பள்ளி செல்லாத குழந்தைகள், இளைஞர்களிடையே, எழுத்தறிவு மோகம் வெகுவாகக் குறைந்துவிட்டது. ஏழை நாடுகளில், முக்கியமாக மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமாகவுள்ள நாடுகளில், சென்ற பத்து ஆண்டுகளில் எழுத்தறிவு நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. அரசியல்வாதிகளின் வாய்ப்பேச்சு வீரம் காதுமடலைக் கிழித்தபோதிலும், தேசிய முகவாண்மைகளும், பன்னாட்டுக் கொடையாளிகளும் எழுத்தறிவுப் பணிக்கான தங்கள் பண ஒதுக்கீட்டை மிகவும் குறைத்து விட்டார்கள் என்பது உலகறிந்த உண்மை.

எனினும் ஏழை வளர்முக நாடுகளில் எழுத்தறிவின்மையைக் குறைக்க முடியாமலிருப்பதற்கு நிதி பற்றாக்குறை மட்டுமே காரணமன்று. இதற்குப் பல காரணங்கள் உண்டு என்பதைக் கடந்தகாலக் கொள்கைகளும் செயல்முறைகளும் காட்டுகின்றன...

ஊட்டச்சத்து, அடிப்படைச் சுகாதாரம், வீட்டுப் பொருளாதாரம், எச்.ஐ.வி.– ஏமக்குறைவு நோய்க்கல்வி ஆகியவற்றில் பால் வேறுபாட்டுச் சாதனங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய எழுத்தறிவுத் திட்டங்களில் பல பாடத்திட்ட மேம்பாட்டுப் புதுமைகள் புகுத்தப்பட்டுள்ளன. முதியோர் கல்விக்கும், இளைஞர் மற்றும் சிறுவர் கல்விக்குமிடையில் ஒரு நம்பிக்கையூட்டும் பிணைப்பு உருவாகி வருகிறது. இந்தப் போக்குகள், வருகிற ஆண்டுகளில் உண்மையான முன்னேற்றத்தைக் காணமுடியும் என்பதைக் காட்டுகின்றன.

அமுதன் (பன்னாட்டுக் கூரியர் – 2006)

QUESTIONS :

1. "முறையான தொடக்கக் கல்வி என்பது "அடிப்படைக்கல்விதான்" என்று நாம் கருதி வருகிறோம்"– இது பற்றி தங்கள் கருத்து யாது?

2. "பள்ளி செல்லாத குழந்தைகள், இளைஞர்களிடையே எழுத்தறிவு மோகம் வெகுவாகக் குறைந்துவிட்டது" என்கிறார் ஆசிரியர். ஏன்? விளக்கவும்.

3. எழுத்தறிவுக்கான போராட்டத்தில், வருகிற ஆண்டுகளில் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும் என்கிறார் ஆசிரியர். அது எப்படி? இது சாத்தியமானதா? விளக்கவும்.

4. "எல்லோருக்கும் கல்வி" திட்டம் பற்றி தங்கள் கருத்தென்ன? பத்து வரிகளில் குறிப்பு வரைக.

5. ஏழை வளர்முகநாடுகளில் எழுத்தறிவின்மையைக் குறைக்க முடியாமலிருப்பதற்குப் பல காரணங்களுண்டு என்கிறார் ஆசிரியர். தங்களுக்குத்தெரிந்த ஒரு சில காரணங்களை எடுத்துக்கூறி விளக்குக.